Annual Subscription – Rs.120/-
ஆண்டு சந்தா – ரூ.120/-

Price – Rs.10/-
தனி பிரதி – ரூ.10/-

# பொறியாளர்

## PORIYAALAR

கட்டடம் - 16
Volume – 16

அடுக்கு - 05
Issue - 05

பிப்ரவரி 2025
February 2025

**04.02.2025 அன்று தலைமைச் சங்க அலுவலகத்தில் நடைபெற்ற 6-வது செயற்குழு கூட்டம்**







பொறியாளர் சங்கம் மற்றும் உதவிப் பொறியாளர் சங்கம்
பொதுப்பணித்துறை மற்றும் நீர்வளத்துறை, தமிழ்நாடு
சேப்பாக்கம், சென்னை - 600 005
தொலைபேசி: 044-2851 5445 / 044-2951 0445
பொறியாளர் இராமலிங்கம் இல்லம் : 044 - 2854 4043
website : www. aoeaeatnpwd.org / e-mail : aoe_aea@yahoo.com, gsaoe.pwd@gmail.com

## WEDDING GREETINGS

| Bridegroom | Bride | Date & Venue |
|---|---|---|
| **Er.E.Yuvaraja,** B.E.,M.B.A., | **Er.G.E.Monisha,**B.E., **D/o Er.R.Elanchelian,** Former Chief Engineer, PWD, Erode | **Reception on** Tuesday 11.03.2025 between 6.30PM and 9.30PM & **Muhurtham** on Wednesday 12.03.2025 between 9.00AM and 10.00AM at **Muthu Mahal,** Near AET School, Perundurai Road,Erode |
| **Er.S.Sarath Babu,** M.Tech., | **Er.S.Manaswini Devi,**M.Arch **D/o Er.B.Anand Lakshmi,** Assistant Executive Engineer, PWD, Buildings (C&M) Sub Division, Thirupporur | **Muhurtham on** Monday 10.02.2025 from 5.45 AM to 5.55 AM & **Reception on** Monday 10.02.2025 from 5.00 PM onwards at **Raja Muthiah Mahal,** Rukmani Lakshmipathi High Road, Egmore, Chennai-600008 |
| **Er.R.Dhanasekaran,** B.E., **S/o Er.P.Rajasekaran,** Assistant Executive Engineer, WRD. | **G.Ranjitha (a) Ramya,** M.Sc.,B.Ed., | **Reception on** Saturday 01.03.2025 from 6.00 PM to 9.00 PM at **Sengunthar Thirumana Mahal,** Sooriyampalayam, Devanagurichi Road, Thiruchengode **Muhurtham on** Sunday 02.03.2025 from 4.30 AM to 5.30 AM at **Arulmigu Thiru Arthanareeswarar Malai Kovil,** Thiruchengode |

**We wish them a happy & Prosperous Wedding Life – Editor**

**ASSOCIATION OF ENGINEERS, TNPWD & TNWRD AND**
**ASSISTANT ENGINEERS' ASSOCIATION, TNPWD & TNPWRD**
**PWD & WRD COMPOUND, CHEPAUK, CHENNAI-5**
**PHONE : 044-28515445 / 29515445**

**FOR THE KIND ATTENTION OF OUR MEMBER ENGINEERS**
**MEMBERSHIP SUBSCRIPTION FOR THE YEAR 2025**

- **Annual Member Subscription** — **Rs. 2000/-**
- **Retired Engineers** (to receive Poriyaalar Bulletin) — **Rs. 500/-**

We request our member Engineers to pay the **SUBSCRIPTION FOR THE YEAR 2025** be a continuous member of our Association.

**For online transactions:-**

**A/c Name: AOE TNPWD, A/c No. 10031640837,**
**IFSC: SBIN0006489, State Bank of India,**
**PWD Complex, Chepauk, Chennai-600005**

**Solicit your earnest Co-operation in this regard...**

**Er.D.Sivakumar**
Treasurer, AOE & AEA

**Er.M.Dhanasekaran**
General Secretary, AOE

15.02.2025

**பொதுச் செயலாளர் மடல்**

**பெருமதிப்பிற்குரியீர், பேரன்பிற்கினியீர், வணக்கம்.**

✍ நீர்வளத்துறை மற்றும் பொதுப்பணித்துறை இரண்டிற்கும் புதியதாக பொறுப்பேற்றுள்ள கூடுதல் தலைமைச் செயலாளர் மற்றும் அரசு செயலர் ஆகியோர்களின் பணி சிறக்க வாழ்த்துக்களையும், பாராட்டுக்களையும் தெரிவித்துக்கொள்கிறோம்.

✍ ஊதிய விகிதம் தொடர்பான வழக்கின் தீர்ப்பினை நடைமுறைபடுத்தாதது குறித்து நிதித்துறை மீது தொடரப்பட்ட நீதிமன்ற அவமதிப்பு வழக்கு விரைவில் விசாரணைக்கு கொண்டுவர நடவடிக்கை எடுக்கப்பட்டுவருகிறது. அதே சமயம் நிதித்துறை தொடுத்துள்ள மேல்முறையிட்டு மனுவிற்கான பதில்மனு தாக்கல் செய்யவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுவருகிறது.

✍ 22.01.2025 அன்று முதன்மை தலைமை பொறியாளர் மற்றும் தலைமை பொறியாளர் (பொது), நீர்வளத்துறை அவர்களின் அலுவலகத்தில் நடந்த குறைதீர்ப்பு கூட்டத்தில் நீதிமன்ற தீர்ப்பின்படி பொறியாளர்களுக்கு ஊதியவிகிதம் நிர்ணயித்தல் தொடர்பாக எடுத்துரைக்கப்பட்டது. துறை ரீதியில் தீர்ப்பினை நடைமுறைப்படுத்த வலியுறுத்தப்பட்டது. இது குறித்து தேவைப்படும் ஆலோசனையை நிதித்துறையுடன் கலந்தாலோசித்து நடவடிக்கை எடுக்கப்படும் என முதன்மை தலைமை பொறியாளர் மற்றும் தலைமை பொறியாளர் (பொது), நீர்வளத்துறை அவர்களால் தெரிவிக்கப்பட்டது.

✍ மேற்கண்ட கூட்டத்தில் புதியதாக பதவி உயர்வு பெற்றுள்ள உதவிசெயற்பொறியாளர்கள் மற்றும் செயற்பொறியாளர்களின் ஊதிய விகித நிர்ணயித்தலில் ஏற்படுகின்ற முரண்பாடுகளை களையவும் வலியுறுத்தப்பட்டது. துறை ரீதியில் முறையான ஒத்துழைப்பு நல்காத அலுவலர்கள் மீது உரிய நடவடிக்கை எடுக்கவும் கேட்டுக்கொள்ளப்பட்டது.

✍ உதவிபொறியாளர் ஊதிய விகிதம் நிர்ணயித்தல், நேரடி நியமனத்தில் ஏற்பட்டுள்ள மாற்றங்கள் ஆகியவற்றை முறைப்படி களைந்திட, பொறியியல் பணித்தொகுதி மற்றும் சார்நிலை பொறியியல் பணிதொகுதி விதிகளில் தற்போதைய நடைமுறைக்கு ஏற்ப விதித் திருத்தம் மேற்கொள்ள வேண்டி முதன்மை தலைமை பொறியாளர் மற்றும் தலைமை பொறியாளர் (பொது), நீர்வளத்துறை மற்றும் பொதுப்பணித்துறை அவர்களிடம் வலியுறுத்தப்பட்டது.

✍ மையச் சங்க செயற்குழு கூட்டத்தில் விவாதிக்கப்பட்டதன் அடிப்படையில் பொறியியல் சார்நிலை பணிதொகுப்பில் இளநிலை பொறியாளர்களுக்கு உரிய பணிவிதிகளில் தளர்வு செய்து வரைவாளர்களை இளநிலைப் பொறியாளர்களாக பணியமர்த்திட வெளியிடப்பட்ட அரசாணைக்கு எதிரான நடவடிக்கைகள், வழக்கறிஞருடன் கலந்தாலோசித்து எடுக்கப்பட உள்ளன.

✍ "COVID"-க்கு பிறகு அனைவரிடமும் உடல் நலன் பற்றிய விழிப்புணர்வு ஏற்பட்டுள்ளது வரவேற்கத்தக்கதாகும். எனினும் **"பொறி.T.அண்ணாதுரை"** போன்ற இளம் பொறியாளர்களின் மறைவு வேதனையளிக்கிறது. பொறியாளர்கள் சேமநலநிதி வரம்பினை உயர்த்தப்பட வேண்டும் என்ற உறுப்பினர்களின் கோரிக்கை நிறைவேற்றிட மையச் சங்கம் ஆவலுடன் உள்ளது. அதற்குரிய வகையில் **பொறியாளர் சேமநலநிதியில் அனைவரும் உறுப்பினர்களாக சேர்ந்திட கேட்டுக்கொள்கிறோம். தற்போது வரை உறுப்பினர் எண்ணிக்கை 686 இது விரைவில் 1000த்தை கடந்திட நடவடிக்கை எடுக்க அனைத்து கிளைச் சங்கங்களையும் கேட்டுக்கொள்கிறோம்.**

✍ இந்த ஆண்டிற்குரிய உறுப்பினர்கள் சேர்க்கையை இம்மாத இறுதிக்குள் நிறைவு செய்திட கேட்டுக்கொள்கிறோம். அதனடிப்படையில் பொறியாளர் சேமநலநிதி உறுப்பினர் சேர்க்கையும் உயர்த்த நடவடிக்கை தொடர இயலும் எனவும் தெரிவித்துக்கொள்கிறோம்.

✍ குறைதீர்ப்பு கூட்டத்தில் கலந்தாலோசிக்க விண்ணப்பமாக அளிக்கப்பட்ட நமது கருத்துக்கள் பிரிதொரு பக்கத்தில் வெளியிடப்பட்டுள்ளது.

மிக்க அன்புடன்,

**பொறிஞர்.H.வேலன்,**
பொதுச் செயலாளர், உதவிப் பொறியாளர் சங்கம்

**பொறிஞர்.மு.தனசேகரன்,**
பொதுச் செயலாளர்,பொறியாளர் சங்கம்

## WRD - RETIREMENT ON 31.01.2025

| | | |
|---|---|---|
| 1 | **பொறி.D.சாந்தி** | இணைத் தலைமைப் பொறியாளர் |
| 2 | **பொறி.V.ராமகிருஷ்ணன்** | உதவிசெயற்பொறியாளர் |

அரசாணை (வாலாயம்) எண்.46, நீர்வளத்(டி2)துறை, நாள்: 31.01.2025

# MINUTES OF 6$^{TH}$ PEC MEETING HELD ON 04.02.2025

The 6$^{th}$ combined PEC meeting of AOE & AEA was held on 04.02.2025 at Association Office Building, Chepakkam, Chennai. The meeting was started as stated 6.15PM. The Secretary & Joint Secretaries and EC members of AOE & AEA actively participated in the meeting.

The meeting started with friendly welcome of **Er.S.Srinivasan**, President, AEA.

**Er.M.Dhanasekaran,** General Secretary, AOE briefs that the necessary activities are being taken to bring the contempt petition for hearing so as to implement the Court Order in WP 20401 / 2020 dated 04.04.2024 related with the fixation of Pay Scale for Assistant Engineers, Assistant Executive Engineers and Executive Engineers.

Regarding the promotions & postings, the General Secretary, AOE said that necessary request has been made to the Engineer-in-Chief & Chief Engineer (General), PWD & WRD to pursue for estimate of vacancy in all level for the year 2024-25.

The General Secretary, AOE announced that our Association of Engineer has been successfully registered as **"Association of Engineers – TNPWD & TNWRD"** as approved in General Body conducted in February 2024 at Trichy.

The PEC appreciates **Er.P.M.Karthik** who took necessary steps for such Registration. Similar steps are being taken for Registration of Assistant Engineers Associaiton.

The General Secretary open up discussion about to conduct General Body or Central Executive Committee Meeting. After discussion, **Er.S.Manikandan,** President, AOE suggested to have **CEC** in the middle of **April–2025** so that **General Body** can be conducted as per schedule in Bye-law.

The General Secretary, AOE, said that revised Bye-laws after incorporating the amendment as approved in last General Body meeting has been completed and will be published soon

The PEC suggested to insists Engineer-in-Chief & Chief Engineer (General), PWD & WRD to take necessary Departmental action to finalise the cases connected with Executive Engineers promotion.

The promotion issued for Draughtsman as Junior Engineers after relaxing the necessary service condition as cited in service rule was discussed in PEC.

The President, AEA briefed the consequence of such promotion and brought notice of the PEC about disappointment of Assistant Engineers regarding such promotion with rule relaxations.

The General Secretary, AOE explained about grounds and its dependability in legal aspects.

**Er.S.Manikandan,** President, AOE generally suggested that the member Engineers can participate in Association activities at branch levels, instead of marching parallel lines, also suggest that the senior might have given proper guidance to Juniors to streamline their potential for welfare of Members aligned with the Association.

In the PEC, it was also discussed about the completing the annual membership and membership for ENGIBEF.

After briefing the discussion on Subject Agenda the following resolutions has been made unanimously:

1. Resolved to request the Engineer-in-Chief & Chief Engineer (General), PWD & WRD to take steps to implement Court Order issued on Pay Cases.
2. Resolved to request Engineer-in-Chief & Chief Engineer (General), PWD & WRD to take necessary Departmental action to ensure benefits like Additional Charge Allowances, Selection Grade, etc. without any hindrance.
3. Resolved to circulate detailed statement about Pay Case and its status for awareness of member.
4. Resolved to find legal ways to strike down the activities like relaxation of service rule against benefits of Engineers and to register the agitation of Engineers.
5. Resolved to give approval to **conduct CEC during April 2025**, the Venue and date shall be finalized soon.

After passing the resolution the meeting comes to end with vote of thanks given by **Er.H.Velan,** General Secretary, AEA.

| | |
|---|---|
| **Er.H.Velan** | **Er.M.Dhanasekaran** |
| General Secretary, AEA | General Secretary, AOE |

**Copy to:**

1. **All PEC Members of AOE & AEA**
2. **All Branches of AOE & AEA**

## கிளைச் சங்கங்களில் சார்பில் நடைபெற்ற 2025-ஆம் புத்தாண்டு கலந்துரையாடல் கூட்டம்

### ஈரோடு கிளை:










### திருச்சி கிளை:

திருச்சி கிளை சங்கத்தின் புத்தாண்டு கூட்டம் 30.12.2024 மாலை 6.30 மணியளவில் பொறியாளர் நாச்சிமுத்து இல்ல கூட்ட அரங்கில் நடைபெற்றது. திருச்சி கிளை, பொறியாளர் சங்க தலைவர் மற்றும் கண்காணிப்புப் பொறியாளர், நீ.வ.து., நடுக்காவேரி வடிநில வட்டம், திருச்சி, பொறி.S.சிவகுமார், அவர்கள் கூட்டத்தினை தலைமை ஏற்று நடத்தினார். கண்காணிப்புப் பொறியாளர், நீ.வ.து., சிறப்பு திட்ட வட்டம், திருச்சி பொறி.M.பவழக்கண்ணன் மற்றும் செயற் பொறியாளர், நீ.வ.து., அரியாறு வடிநில கோட்டம், திருச்சி பொறி.V.ராஜேந்திரன் ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பித்தனர். உதவி பொறியாளர் சங்க கிளை செயலாளர் பொறி.R.கார்த்திகேயன் வரவேற்புரை வழங்க, திருச்சி கிளை, பொறியாளர் சங்க செயலாளர் மற்றும் செயற்பொறியாளர், நீ.வ.து., சிறப்பு திட்ட கோட்டம், திருச்சி பொறி.S.J.சிவகுமார் அவர்கள் புத்தாண்டு வாழ்த்துக்களைத் தெரிவித்து கூட்டத்தை தொடங்கி வைத்தார்.

2025-ஆம் ஆண்டிற்கான நாட்காட்டி, நாட்குறிப்பினை கிளை பொறியாளர் சங்க தலைவர் வெளியிட கண்காணிப்புப் பொறியாளர், சிறப்பு திட்ட வட்டம், திருச்சி, அவர்கள் பெற்றுக்கொண்டார்.

புத்தாண்டு கூட்டத்தில் திரளாக கலந்து கொண்ட உதவி செயற்பொறியாளர்கள் மற்றும் உதவி பொறியாளர்கள் தங்களது புத்தாண்டு வாழ்த்தினை தெரிவித்துப் பின்னர் கீழ்கண்ட கருத்துக்களையும் ஆலோசனைகளையும் பகிர்ந்துகொண்டனர்.






1. உதவி செயற்பொறியாளர்கள் மற்றும் உதவி பொறியாளர்களும் கிளைச் சங்க கூட்டங்களில் பங்குபெற்று தங்களது கருத்துக்களையும் அனுபவங்களையும் நடைமுறையில் இருக்கும் பிரச்சனைகளையும் பகிர்ந்துகொண்டு பிற துறைகளையும் பலப்படுத்தும்படி கேட்டுக்கொண்டனர்.
2. பதவி உயர்வு மற்றும் ஊதிய வழக்குகள் குறித்து விவாதிக்கப்பட்டது.
3. நீர்வளத்துறைக்கு என தனி பணி விதிமுறைகள் உருவாக்கப்பட வெண்டும் என்று வலியுறுத்தப்பட்டது.
4. உறுப்பினர்களை பொதுக்குழு கூட்டத்தில் கலந்து கொள்ள செயற்குழு உறுப்பினர்கள் தொலைபேசி மூலம் தொடர்பு கொண்டு அழைக்கும்படி கேட்டுக்கொண்டனர்.
5. நீர்வளத்துறையில் புதிய திட்டங்களுக்கு விரைவாக வடிவமைப்பு மற்றும் வரைபடங்கள் பெறுவதற்கு ஏதுவாக மண்டலம் தோறும் வடிவமைப்பு கோட்டங்கள் உருவாக்கிடவும் மின்கோட்டங்கள் மற்றும் இயந்திரவியல் கோட்டங்கள் உருவாக்கிடவும் நடவடிக்கை எடுக்க கேட்டுக்கொண்டனர்.
6. தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணையத்தால் தற்போது நேர்காணல் அல்லாத பதவியாக மாற்றப்பட்டுள்ள உதவிபொறியாளர் பதவிக்கு மீண்டும் நேர்காணல் முறை கொண்டுவர வலியுறுத்தப்பட்டது.
7. தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணையத்தால் தற்போது ஒருங்கிணைந்த தொழில்நுட்ப பணிகள் தேர்வு என பெயர் மாற்றம் செய்யப்பட்டள்ளதனை மீண்டும் ஒருங்கிணைந்த பொறியியல் பணிகள் தேர்வு என பெயர் மாற்றம் செய்ய வலியுறுத்தப்பட்டுள்ளது.

உதவிபொறியாளர் சங்கத் தலைவர் பொறி.S.ஐஸ்வர்யா நன்றியுரை வழங்க இரவு 8.30 மணியளவில் விருந்து உபசரிப்புடன் கூட்டம் இனிதே நிறைவு பெற்றது.

**பொறி.R.கார்த்திகேயன்,**
செயலாளர், உதவிபொறியாளர் சங்கம்

**பொறி.S.J.சிவகுமார்,**
செயலாளர், பொறியாளர் சங்கம்

## பொள்ளாச்சி கிளை:

பொறியாளர் சங்கம் மற்றும் உதவிப் பொறியாளர் சங்க புத்தாண்டு கலந்துரையாடல் கூட்டம் 09.01.2025 அன்று மாலை 6.00 மணியளவில் பொறியாளர் இல்லத்தில் பொறியாளர் சங்கத் தலைவர் பொறி.M.கார்த்திகேயன், கண்காணிப்புப் பொறியாளர், நீ.வ.து., பரம்பிக்குளம் ஆழியார் வடிநில வட்டம் அவர்கள் தலைமையிலும், இணைச் செயலர் பொறி.S.சிங்காரவேல், பொறி.சிவகுமார், செயற்பொறியாளர், பரம்பிக்குளம் கோட்டம் அவர்கள் முன்னிலையிலும் இனிதே துவங்கியது.

கூட்டத்தில் பொறி.N.ஜெயக்குமார், உதவிபொறியாளர், முகாம் பிரிவு, உடுமலை அவர்களின் அன்பு மனைவியார் மற்றும் பொறி.A.மகேந்திரன், செயற்பொறியாளர் திருமூர்த்தி அணை கோட்டம் அவர்களின் தாயார் ஆகியோரின் மறைவிற்கு இரங்கல் தெரிவித்து மௌன அஞ்சலி செலுத்தப்பட்டது.

மேலும், கூட்டப் பொருள் தொடர்பாக உறுப்பினர்கள் பொறி.K.பாஸ்கரன், தலைவர், உதவிபொறியாளர் சங்கம், பொறி.G.சந்திரமௌலி, உதவிபொறியாளர், பொறி.P.அரவிந்தன், உதவிபொறியாளர், பொறி.கிருபாகரன், உதவிபொறியாளர், பொறி.N.தியாகராஜன், உதவிபொறியாளர், பொறி.கோ.லீலா, உதவிசெயற்பொறியாளர், பொறி.சிவக்குமார், செயற்பொறியாளர் ஆகியோர் தங்களது கருத்துக்களை எடுத்துரைத்தனர்.

பின்பு உறுப்பினர்களின் கலந்துரையாடலுக்குப் பின் கீழ்கண்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

1. எட்டாவது ஊதியக்குழு மத்திய அரசால் அறிவிக்கப்பட உள்ள நிலையில் பொறியாளர்களின் ஆறாவது ஊதியக்குழு வழக்குகளை விரைந்து முடித்து அனைத்து பொறியாளர்களுக்கும் எட்டாவது ஊதியக்குழுவின் ஊதியம் கிடைக்க உரிய நடவடிக்கை எடுக்க தலைமைச் சங்கத்தை கோருவது என தீர்மானிக்கப்பட்டது.
2. உதவிசெயற்பொறியாளர்களின் பதவிகளுக்கான காலி இடங்களை அதிகப்படுத்தி 2007, 2009 ஆண்டு உதவிபொறியாளர்கள் விரைந்து பதவி உயர்வு பெறுவதற்கு ஏதுவாக புதிய பணியிடங்களை உருவாக்கவும், மேலும் தற்போது உதவிசெயற்பொறியாளர் பதவிக்கு தகுதியுள்ள இளம்பொறியாளர்கள் இன்மையால் இளம்பொறியாளர்களுக்காக காலியாக ஒதுக்கி வைக்கப்படும் உதவிசெயற்பொறியாளர்களின் காலி பணியிடங்களுக்கு TNPSC உதவிபொறியாளர்களை நியமிக்க உரிய விதிகள் தளர்த்திட வழிவகை செய்ய அரசிடம் வலியுறுத்த தலைமைச் சங்கத்தை கோருவது என தீர்மானிக்கப்பட்டது.
3. உதவிபொறியாளர்களின் பிரிவு அலுவலகத்தை பணிபுரிய போதிய பணியாளர்கள் இல்லாததால் பணி சூழல் மிகவும் பாதிக்கப்படுகிறது. எனவே, பிரிவு மட்டத்தில் போதுமான பணியாளர்களை நியமிக்க தலைமைச் சங்கம் மூலம் நடவடிக்கை எடுக்க கோருவது என தீர்மானிக்கப்படுகிறது.
4. உதவிபொறியாளர்களின் பதவி உயர்வு விரைந்து அளிக்க ஏதுவாக உதவிபொறியாளர்களுக்கு காலமுறை பதவி உயர்வு அளிக்க அரசை வலியுறுத்த தலைமைச் சங்கத்தை கோருவது என தீர்மானிக்கப்பட்டது.
5. ஊதிய வழக்கை வென்றெடுக்க தலைமை சங்கத்திற்கு வழக்கு நிதி வழங்கவும் பொறியாளர் சேம நல நிதியில் பொறியாளர்கள் அனைவரையும் இணைக்கவும் தீர்மானிக்கப்பட்டது.
6. நவீன முறையில் புதுப்பிக்கப்பட்டுள்ள பொள்ளாச்சி கிளையின் பொறியாளர் இல்ல கட்டடி செலவினங்களில் ஏற்பட்டுள்ள பற்றாக்குறையை சரி செய்ய தலைமைச் சங்கத்தினால் இயன்ற நிதி உதவியினை இக்கிளைச் சங்கத்திற்கு வழங்க கோருவது என தீர்மானிக்கப்பட்டது.

பொறி.M.அக்பர் அலி, செயலர், பொறியாளர் சங்கம் அவர்களின் நன்றியுரையுடன் இரவு விருந்துக்குப் பின் கூட்டம் இனிதே நிறைவுபெற்றது.

**பொறி.M.அக்பர் அலி**
செயலாளர், உதவிபொறியாளர் சங்கம்

**பொறி.D.ராஜன்**
செயலாளர், பொறியாளர் சங்கம்

**தஞ்சாவூர் கிளை:**

உதவிப் பொறியாளர் சங்கக் கூட்டம் 27.01.2025 அன்று தஞ்சாவூர் கிளைச் சங்கக் கட்டிடத்தில் நடைபெற்று கீழ்கண்டவாறு தீர்மானங்கள் ஒருமனதாக நிறைவேற்றப்பட்டுள்ளது.

1. வரைவுப்பரிவில் பல்வேறு படிநிலைகளில் வரைவாளராக இருப்பவர்கள் இளம் பொறியாளர்களாக பணிவிதிகளுக்கு முரணாக பதவி உயர்வு பெறுவது தொடர்பான பெயர் பட்டியலின் அரசாணைக்கு எதிராக சட்டப் போராட்டத்தை மைய சங்கம் முன்னெடுக்க வேண்டும்.
2. வரும் வாரங்களில் மேலே கூறிய அரசாணைக்கு எதிராக உதவிப் பொறியாளர்களால் கீழ்க்காவிரி வடிநில வட்ட வளாகத்தில் கருப்பு பட்டை அணிந்து கவன ஈர்ப்பு போராட்டம் நடத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது.
3. பொறியாளர்கள் சங்கம் உதவிப் பொறியாளர்கள் சங்கம் ஆகியவற்றிற்கு அமைப்பு விதிகள் தனித்தனியாக இருப்பதைப் போல் தனித்தனி வங்கிக் கணக்குகள் இருக்க வழிவகை செய்து பொறியாளர்கள் மற்றும் உதவிப் பொறியாளர்களிடம் பெறப்படும் நிதிகள் தத்தம் கணக்குகளில் பராமரித்திட மைய சங்கம் ஆவண செய்ய வேண்டும்.
4. கடந்த 20.08.2024 அன்று தஞ்சாவூர் கிளைச் சங்க வளாகத்தில் நடந்த பொறியாளர்கள் சங்கம் மற்றும் உதவிப் பொறியாளர்கள் சங்கக் கூட்டத்தில் பணி விதிகளில் இருக்கும் குறைகளைச் சுட்டி காட்டி அறிக்கை தயாரித்து மைய சங்கத்திற்கு அளிக்கப்பட்டது. இந்த அறிக்கை தொடர்பாக எந்த நடவடிக்கையும் இதுவரையில் மைய சங்கத்திலிருந்து மேற்கொள்ளப்படாததாலும், இந்த அறிக்கையினை அனைத்து சங்க உறுப்பினரிடமும் இதுகாறும் ஆலோசிக்காமல் இருப்பதாலும், சட்டப் போராட்டத்தை நமது சங்கம் மூலமாக முன்னெடுக்கப்போவதாக முடிவெடுக்கப்பட்டுள்ளது.

மேற்கண்ட தீர்மானங்கள் தொடர்பாக பொறியாளர்கள் அனைவரும் ஒருங்கினைந்து கவன ஈர்ப்பு போராட்டம் நடத்துவதாக 27.01.2025 நடைபெற்ற சங்கக் கூட்டத்தில் ஒருமனதாக முடிவெடுக்கப்பட்டது.

**V.சபரிநாதன்**
தலைவர், உதவிப் பொறியாளர் சங்கம்

**S.திருமாறன்**
செயலாளர், உதவிப் பொறியாளர் சங்கம்

**ஆசிரியர் பதில்...**

மேற்கண்ட கடிதத்தில் பத்தி 3-ல் குறிப்பிட்டுள்ள வங்கி கணக்குகள் ஏற்கனவே உள்ளன என தெரிவித்துக்கொள்கிறோம்.

பத்தி 4-ல் குறிப்பிட்டுள்ளபடி அனுப்பப்பட்டுள்ள விதி திருத்தங்களில் அரசாணை எண்.3037, பொதுப்பணித்துறை, நாள் 22.12.1986 பற்றிய குறிப்புகள் இல்லாததும், பரிந்துரைக்கப்பட்ட விதி திருத்தங்கள் என்பது முந்தைய மூத்த பொறியாளர்களால் ஏற்படுத்தப்பட்ட விதிதிருத்தங்களை கொண்டு உருவாக்கப்பட்டுள்ள தற்போதைய விதிகள் மூலம் நேரடி நியமன பட்டதாரி பொறியாளர் பெற்றுவரும் நலன்களை பாதிக்கின்ற வகையில் இருப்பதால், இப்பொருள் குறித்து விரைவில் நடத்தப்பட உள்ள உதவிப்பொறியாளர் கலந்துரையாடல் கூட்டத்தில் கூடுதல் விளக்கம் அளிக்கப்படும் என தெரிவிக்கப்படுகிறது.

## தருமபுரி கிளை:

**தமிழ்நாடு அரசு பொதுப்பணித்துறை மற்றும் நீர்வளத்துறை பொறியாளர் சங்கம் மற்றும் உதவி பொறியாளர் சங்கம் – தருமபுரி கிளை**

09.01.2025 அன்று தமிழ்நாடு அரசு பொதுப்பணித்துறை மற்றும் நீர்வளத்துறை பொறியாளர் சங்கம் மற்றும் உதவி பொறியாளர் சங்கம் தருமபுரி கிளையின் பொறியாளர்கள் கலந்தாய்வு கூட்டம் தருமபுரியில் கட்டப்பட்டு வரும் பொறியாளர் இல்ல கட்டிடத்தில் மாலை 6.00 மணியளவில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் தருமபுரி கிளை சங்கத்தின் பொதுப்பணித்துறை மற்றும் நீர்வளத்துறை பொறியாளர்கள் கலந்து கொண்டு கீழ்க்கண்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டது.

**தீர்மானம் 1:** தருமபுரியில் கட்டப்பட்டு வரும் பொறியாளர் இல்லத்திற்கு நிதி மற்றும் கட்டிடப் பொருட்களுக்கு பங்களிப்பு வழங்கிய மூத்த பொறியாளர் சங்கம், தலைமை சங்கம், மூத்த பொறியாளர்கள், தருமபுரி கிளை பொறியாளர்கள் மற்றும் மற்ற கிளை சங்க பொறியாளர்களுக்கு நன்றி தெரிவித்து தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

**தீர்மானம் 2:** பொதுப்பணித்துறை மற்றும் நீர்வளத்துறை பொறியாளர்களின் ஊதிய முரண்பாடுகளை களைய தலைமை சங்கம் தொடர் நடவடிக்கை எடுக்கவும், எடுக்கும் நடவடிக்கைகளுக்கு தருமபுரி கிளைச் சங்கம் முழு ஒத்துழைப்பு வழங்க தீர்மானிக்கப்பட்டது.

**தீர்மானம் 3:** பொறியாளர்கள் களப்பணியாளர்கள் இன்றி பணி மேற்கொள்ளும் சிரமத்தை போக்கும் வகையில் கூடுதல் களப்பணியாளர்கள் நியமிக்க உரிய நடவடிக்கை எடுக்க தலைமை சங்கத்தை வலியுறுத்தி தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

**தீர்மானம் 4:** பொறியாளர் இல்லம் கட்டும் பணி நிதி பற்றாக்குறையில்லாமல் தொய்வின்றி நடக்க ஏதுவாக தலைமை சங்கம், மற்ற கிளை சங்கங்கள் மற்றும் சங்க பொறியாளர்களின் நிதி பங்களிப்பு பெற உரிய நடவடிக்கை எடுக்க தீர்மானிக்கப்பட்டது.






## Dharmapuri Poriyalar Illam

Contribution/ Donation Received details

| S.No. | Name of Contributor/ Donator | Amount in Rs. |
|---|---|---|
| 1 | Er.S.Samynathan, SE, PWD, Chennai | 25000 |
| 2 | Er.J.Ganesh, AEE, WRD, Dharmapuri | 25000 |
| 3 | Er.M.Mohanapriya, AE, WRD, Dharmapuri | 15000 |
| 4 | Er.P.Malathi, AE, WRD, Dharmapuri | 15000 |
| 5 | Er.A.Asokan, Former Spl CE, WRD, Krishnagiri | 10000 |
| 6 | Er.K.Vijaya, AEE, PWD, Harur | 15000 |
| 7 | Er.J.Dhanesh, AE, PWD, Harur | 15000 |
| 8 | Er.S.Parveena, AEE, PWD, Uthangarai | 10000 |
| 9 | Er.S.Sivashankar, AE, WRD, Hosur | 15000 |
| 10 | Er.M.Gnanavel, AE, PWD, Dharmapuri | 15000 |
| 11 | Er.E.Arivazhagan, EE, WRD, Tiruvannamalai | 10000 |

**பொறி.V.சாம்ராஜ்**
செயலாளர், உதவிபொறியாளர் சங்கம்

**பொறி.V.உதயகுமார்**
செயலாளர், பொறியாளர் சங்கம்

### Transfer and posting of Executive Engineer in WRD, Vide G.O.(D) No.42, Water Resources (A2) Department, Dated 30.01.2025

| | | |
|---|---|---|
| 1 | **Er.B.Shobana,** Executive Engineer, Lower Pennaiyar Basin Division, Villupuram | Executive Engineer, WRD, Ground Water Division, Vellore |
| 2 | **Er.V.Mohan,** Executive Engineer, WRD | Deputy Superintending Engineer, WRD, Plan Formulation Circle, Trichy |

### Transfer and posting of Superintending Engineer in WRD, Vide G.O.(D) No.48, Water Resources (A2) Department, Dated 31.01.2025

| | | |
|---|---|---|
| 1 | **Er.A.Jayashanmugam,** Superintending Engineer, WRD (On leave) | Joint Chief Engineer, WRD, O/o Chief Engineer, WRD, O&M & SDSO, Chepauk, Chennai-5 |

### Transfer and posting of Superintendign Engineer in WRD, Vide G.O.(Rt.)No.91, Water Resources (A2) Department, Dated 15.02.2025

| | | |
|---|---|---|
| 1 | **Er.M.Magesh Nagarajan,** Superintending Engineer, Tamil Nadu Agricultural Marketing Board, Chennai (O/D) | Superintending Engineer, WRD, Palar Basin Circle, Chepauk, Chennai-5 |

## சங்கத்தின் கோரிக்கை கடிதங்கள்

**கடித எண்.001/ பொ.ச.பொ.ச./2025** **நாள் : 06.01.2025**

பெறுநர்

முதன்மை தலைமை பொறியாளர் மற்றும்
தலைமை பொறியாளர் (பொது), நீ.வ.து.
சேப்பாக்கம், சென்னை-600005

ஐயா,

**பொருள்:** நீர்வளத்துறை - ஊழியர் சங்கம் - பொறியாளர் சங்கம் மற்றும் உதவிப் பொறியாளர் சங்கம் சார்பாக - குறை தீர்க்கும் கூட்டம் - ஆலோசிக்க பரிந்துரைக்கும் கோரிக்கைகள் - தொடர்பாக.

**பார்வை:** முதன்மை தலைமை பொறியாளர் மற்றும் தலைமை பொறியாளர் (பொது), நீர்வளத்துறை அவர்களின் கடித எண்.எஸ்3(2) 34494 / 2024 / நாள் 20.12.2024.

பார்வையில் கண்ட கடிதத்தில் கேட்டுக்கொண்டதன்படி 22.01.2025 அன்று நடைபெற உள்ள குறைதீர்ப்பு குழு கூட்டத்தில் "பொறியாளர் சங்கம் மற்றும் உதவிப் பொறியாளர் சங்கம் - பொதுப்பணித்துறை மற்றும் நீர்வளத்துறை - தமிழ்நாடு" சார்பில் பின்வரும் கோரிக்கைகள் எடுத்துரைக்கப்பட உள்ளன எனவும் அவற்றின் மீதான தீர்வுக்கு எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகள் குறித்து ஆலோசிக்க வேண்டும் எனவும் கேட்டுக்கொள்கிறோம்.

I. ஏழாவது ஊதியக்குழு ஊதிய விகிதம் நடைமுறைப்படுத்துதல்:

உதவிப் பொறியாளர், உதவிச் செயற்பொறியாளர் மற்றும் செயற்பொறியாளர் பதவி இனங்களுக்கு 6வது ஊதியக்குழு ஊதிய விகிங்கள் தொடர்பாக 04.04.2024 அன்று வழங்கப்பட்ட தீர்ப்பினை நடைமுறைப்படுத்தவும் அதனடிப்படையில் 7-வது ஊதியக்குழு ஊதிய விகிதம் நிர்ணயித்தடவும் நடவடிக்கை எடுக்க கேட்டுக்கொள்கிறோம், மேலும் அதுவரையில்:-

உயர்நீதிமன்ற தீர்ப்பில் அறிவுறுத்தியபடி புதியதாக பதவி உயர்வு பெற்ற பொறியாளர்களுக்கு (உதவி செயற்பொறியாளர்கள் ரூ.15600+6600GP, செயற்பொறியாளர்கள் ரூ.15600+7600GP) உரிய ஊதிய விகிதம் நிர்ணயித்திடவும் மேற்படி ஊதிய விகிதத்தை நடைமுறைப்படுத்திட நிதித்துறைக்கும், கருவூலத்துறைக்கும் உரிய ஆலோசனையும், அழுத்தத்தையும் வழங்கிட துறை ரீதியிலான நடவடிக்கை எடுக்க கேட்டுக்கொள்கிறோம்.

II. பொறியாளர்களுக்குரிய பணி சார்ந்த பிற பயன்கள்

- கூடுதல் பொறுப்புப் படி, தேர்வுநிலை, ஆண்டு ஊதிய உயர்வு போன்ற பண பயன்களுக்குரிய அடிப்படை விதிகள் மற்றும் துறைரீதியிலான விதிகள் பற்றிய புரிதலின்றி கருவூலத்துறை மூலம் தணிக்கை செய்யப்பட்டதை தவிர்த்திடவும் மேற்கண்ட பயன்கள் பொறியாளர்களுக்கு எவ்வித இடையூறுமின்றி கிடைத்திட உரிய நடவடிக்கை எடுக்க கேட்டுக்கொள்கிறோம்.

III. உயர்கல்வி:

- தமிழ்நாட்டில் உள்ள முதன்மை கல்வி நிறுவனங்களில் துறை மூலமாக சென்று உயர்கல்வி கற்கவும், ஆராய்ச்சி படிப்புகளை மேற்கொள்ளவும் நடவடிக்கை எடுக்க கேட்டுக்கொள்கிறோம்.
- நீர்வளத்துறை சார்ந்த பாடத்திட்டங்களுக்கு என மாற்றுப் பணியில் உதவி செயற்பொறியாளர் அளவில் விரிவுரையாளர் பணியிடங்களுக்கு செல்ல நடவடிக்கை எடுக்க கேட்டுக்கொள்கிறோம்.

IV. துறை ரீதியிலான மறுசீரமைப்பு பணிகள்:

- நீர்வளத்துறை என அமைக்கப்பட்டதை தொடர்ந்து பணி விதிகள், பணியிடங்கள் உருவாக்குதல், பணியிடங்களை மறுசீரமைத்தல்,D-Code, TNBP ஆகியவற்றை புதுப்பித்தல் போன்ற பணிகளை மேற்கொள்ள கேட்டுக்கொள்கிறோம்.
- ஒவ்வொரு மண்டலத்திற்கும் என தனித்தனியே சட்ட ஆலோசகர் பணியிடங்கள், மின் கோட்டங்கள், இயந்திரவியல் கோட்டங்கள், கட்டுமானம் மற்றும் பராமரிப்பு பணிக்கு என கோட்டங்கள் மற்றும் அதற்குரிய பதவியிடங்களை உருவாக்க கேட்டுக்கொள்கிறோம்.
- துறையில் e-Office நடைமுறைப்படுத்துவதை தொடர்ந்து பிரிவு அலுவலக மட்டத்தில் கணினி மற்றும் தொலைத்தொடர்ப்பு வசதியுடன் தனித்தனியே அலுவலக அமைப்புகள், அலுவலக பணியாளர்கள் மற்றும் களப்பணியாளர்கள் பணியிடங்களை ஏற்படுத்த கேட்டுக்கொள்கிறோம்.
- கோட்ட அளவில் ஒப்பந்தப்புள்ளி பணிகளை கவனித்திடவும் வழக்கு விவரங்களை கவனித்திடவும் ஒரு உதவி பொறியாளர் பணியிடத்தினை உருவாக்கிட கேட்டுக்கொள்கிறோம்.
- கோட்டங்கள் மற்றும் உபகோட்டங்களில் உள்ள தொகுப்பு ஊதியம் பெறும் ஊழியர்களை தேவைப்படும் இடத்திற்கு களப்பணியாளர்களாக பகிர்ந்து அளிக்கும் பட்சத்தில நீர்பங்கீடு பணிகள் மற்றும் புதிய திட்ட உருவாக்கப் பணிகள் உள்ளிட்ட பிற பணிகளையும் சரியாகவும், விரைவாகவும் செய்ய ஏதுவாகும்.

V. கமுக்க அறிக்கை

- கமுக்க அறிக்கை நடவடிக்கைகளை எளிதாக்கவும், தவறாமல் எழுதிடவும் உரிய நடவடிக்கை எடுக்க கேட்டுக்கொள்கிறோம்.

VI. பிற கோரிக்கைகள்:

- நீர்வளத்துறை வளாகத்தினுள் பொது சுகாதாரம் மேம்பாடு
- ஓய்வறை வசதி

மேற்கண்ட பொருட்கள் குறித்து 22.01.2025ல் நடைபெறவுள்ள குறைதீர்ப்பு கூட்டத்தில் ஆலோசிக்க வேண்டும் என மீண்டும் ஒருமுறை கேட்டுக்கொள்கிறோம்.

**பொறி.H.வேலன்,**
பொதுச் செயலாளர், உதவிப் பொறியாளர் சங்கம்

**பொறி.M.தனசேகரன்,**
பொதுச் செயலாளர், பொறியாளர் சங்கம்

---

**Letter No.002/GS-AOE/2025** **Dated: 03.02.2025**

**To**

1. **The Commissioner of Treasuries and Accounts,**
   3rd Floor, Integrated Office Complex for
   Finance Department, Veterinary Hospital Campus,
   Anna Salai, Nandanam, Chennai-600035.
2. **The Principal Secretary to Government,**
   Finance Department, Secretariat, Chennai-600009
3. **Secretary to Government (Expenditure),**
   Finance Department, Secretariat, Chennai-600009.

**Respected Sir,**

**Sub:** TNWRD – **Er.R.Jhancy Rani**, AE, WRD, PW Workshop & Stores Division, Chepauk, Chennai-5 – Selection Grade – Instructions to admit benefit – PAO (North) – Reg.

**Ref:** Copy of Audit return by PAO (North)

We invite your attention on the audit raised by PAO (North) on selection grade bill of **Er.R.Jhancy Rani**, AE, WRD, PW Workshop & Stores Division, Chepauk, Chennai-5 in which it was stated that:

"The request of clarification has been raised by CTA for allowing Selection grade / Additional Charge Allowances for Assistant Engineers who are continuing their scale of Pay as per 6th Pay Commission vide letter No.22558/2023 /D3 dated 14.07.2023."

In this regard we brought the following to your knowledge:

i) The fixation of Scale of Pay as in 6th Pay Commission for post of AE, AEE & EE is challenged vide WP 20401/2020.

ii) During period of hearing the Government issued clarification about Selection grade, Annual Increment, Additional Charge allowances, Promotional Increment for Engineers vide letter dated 05.01.2023, and also stated that such instructions valid till the finality of the case (Refer Para 7 & 9)

iii) The Judgment was delivered on 04.04.2024 where the AE, AEE & EE are allowed to continue to draw Pay Scale as per outcome of One Man Commission formed during 6th Pay Commission. i.e. (G.O.Ms.No.312, Finance (Pay Cell) Department, dated 26.08.2010)

**iv) The Selection Grade, Additional Charge Allowance, Annual Increments are the benefits allowed by Fundamental Rule based service condition which are no way connected with Pay Commission and Scale of Pay.**

v) Moreover the Earlier clarifications on Judgments are allowing the Engineers to get these service benefits.

With the above condition without aware about Judgment and without having proper understanding / interpretation about clarification of Government, returning the claim of Selection Grade for Assistant Engineers is highly regrettable.

Hence, we request you to take necessary steps to issue instructions to PAO / Treasuries for admitting service benefits, such as Selection Grade, Additional Charge Allowance, Annual Increments, etc., for the Engineers holding the post of AE, AEE and EE who are still continuing their Pay Scale as per 6th Pay Commission.

Yours truly,
**Er.M.Dhanasekaran,**
General Secretary, AOE

---

**Letter No.003/GS-AOE/2025** **Dated: 03.02.2025**

To

1. **Additional Chief Secretary to Government,**
   Water Resources Department, Secretariat, Chennai-600009
2. **Engineer-in-Chief & Chief Engineer (General),**
   Water Resources Department, Chepauk, Chennai-600005

**Sub:** TNES – Estimate vacancy for Assistant Executive Engineer – Filling up from Assistant Engineer / Junior Engineer – 3:1 Ratio – Non availability of candidate in 1 Ratio – Relaxation in Special Rule – filling up all vacancy in Assistant Executive Engineer from Assistant Engineer cadre – Requested – Reg.

**Ref:** 1. Our Letter No.040/GS-AOE/2024, dated: 21.10.2024
2. G.O.(2D)No.1, Water Resources (B2) Department, dated 10.01.2025

According to TNES rules 2C(ii), the substantive vacancy in the post of Assistant Executive Engineer shall be filled up by Assistant Engineer of TNES through promotion and by Junior Engineers of TNESS through By transfer of service in ratio on 3:1

The estimate vacancy of Assistant Executive Engineers for the year 2024-25 was sanctioned for 122 nos. In which, the 62 nos of Assistant Engineers were promoted using provision 47(1) of Tamil Nadu Government Servant Conditions Act 2016 vide **Proceedings**

**No.S1(1)/43330/2024 dated 12.12.2024,** though the existing vacancy on that date was 82 nos. The remaining 20 nos were reserved for Junior Engineers / Re-designated Assistant Engineers as per TNES rule 2C(ii). But no appointment was made against those 20 nos of vacancy because, none of existing Junior Engineer / Re-designated Assistant Engineers satisfy the service conditions of 10 years in services as Junior Engineer at the time, whereas the Assistant Engineers who are in due of promotion, recruited in 2007 are inline with 17 years service against requisite of 5 years of service.

As we know, Role of Assistant Executive Engineer in execution and quantum of works being executed as well as to be taken up in Water Resources Department, filling up the vacancy indeed, so filling the vacancy position in Assistant Executive Engineer through promotion from Assistant Engineers of 2007 batch by relaxing rule provision 2C (ii) of TNES this time only, shall be considered. In this regard, the representations has been made already to Additional Chief Secretary to Government, WRD vide reference 1st cited.

The same kind of rule relaxation has been made recently vide G.O. cited in reference 2, where provision of TNESS stipulated for promoting Draughting Officer to Junior Engineer, who has to put 4 years of service has been given relaxation aid to promote Draughting Officers as Junior Engineers.

Considering service experience of Assistant Engineers and non-availability of Junior Engineers / Re-designated Assistant Engineers, we conclude our requisition for relaxing rule provision 2C(ii) of TNES only this time so as to fill up vacancy in AEE through promotion from AE of 2007 batch.

Thanking you,

Yours truly,
**Er.M.Dhanasekaran,**
General Secretary, AOE

---

**Letter No.005/GS-AOE/2025** **Dated: 12.02.2025**

To

**The Hon'ble Chief Minister of Tamil Nadu,**
Secretariat, Chennai-600009

Respected Sir,

**Sub:** Requesting to direct Finance Secretary to implement Court Order dated 04.04.2024 in WP No.20401/2020 – Regarding Pay Scale for Engineers of Cadre Assistant Engineers, Assistant Executive Engineers & Executive Engineers of all departments in Tamil Nadu.

We invite your kind consideration on the issue fixation of Pay Scale for Engineers in 6th Pay Commission.

The Pay Scale as equivalent to Central Scale was granted in 2006 by the former **Hon'ble Chief Minister of Tamil Nadu Dr.Kalaignar,** during the implementation of 6th Pay Scale. The administrative officers of Finance (Pay Cell) Department, having improper analysis and comparisons, mislead the Government and reduced the Pay Scale of Engineers, for approximately 52 categories of 20 more Departments from 2010 onwards.

So, the litigation has been started from 2010 onwards, due to this till now, the said categories of Engineers are getting salary by the Court Order and they are not allowed to draw benefits of 7th Pay Commission implemented in 2017.

But, now the 8th Pay Commission may be brought to implement soon. This leads big agitation and unsatisfication on Governance, among the Engineers.

At present, the fourth round of litigation related to Scale of Pay has come to end by Court ordered on 04.04.2024 by directing the Government to form a new PGRC to rectify the issue. But again the officers of Finance (Pay Cell) Department went for an appeal without showing interest to settle the issue, stating that filing appeal has an usual procedure.

The reason behind this may be the huge Financial crises but which has been created by poor understanding on the issue of fixation of Pay Scale and improper guidance of Pay Cell officials. Nowhere the Engineers are responsible for this Financial burden.

Now we wish to highlight the following issue which makes unpleasant situation among Engineers, because of Finance (Pay Cell) Department and its poor application of mind against of Court Order.

- During the hearing of WP 20401/2020 the Additional Chief Secretary (Finance Department) gave instructions dated 05.01.2023 citing that there instructions are valid till the finality of case.
- Now case was ordered on 04.04.2024 with directions to form new PGRC till then outcome of One Man Commission formed on 2010 during 6$^{th}$ Pay Commission shall be implemented.

The Pay Cell of Finance Department has filed appeal but no order has been given in appeal. So the Pay Cell has to issue proper instruction freshly against previous instruction dated 05.01.2023 to all head of departments and Commissioner of Treasury and Accounts. But Finance Department did not turn up till now even after 9 months from Court Order.

Because of rigid silence of Pay Cell / Finance authorities:

- The Engineers of our Department especially those who newly promoted as Assistant Executive Engineer & Executive Engineers are not allowed to draw salary of promoted position and forced to draw lower grade as Assistant Engineers & Assistant Executive Engineers respectively which is absolutely against natural Justice.

**Example - 1:**

Engineers are not allowed to draw salary for more than 3 months:

1. Er.Jagadesh, AEE at Erode.
2. Er.Dhanalakshmi, AEE at Virudhunagar
3. Er.Selvi, AEE at Vellore

List will be continued….

**Example – 2:**

Other than few, all the Engineers who promoted as Assistant Executive Engineers in WRD and PWD after 2022 are till now Engineers forcing to get lower grade salary.

Hence we request your kind consideration to advice Secretary Finance department and Pay Cell authorities to issue necessary instruction within time frame of 15 days based on Court Order dated 04.04.2024 in WP 20401/2020 thereby enable Engineers to get salary. We also request that the necessary departmental action shall be initiated if they fail to follow instructions.

Because the number of representation made by our Association and by individuals are not answered. Even though the clarifications rised by Treasury also not answered by Finance Department. Since, the action of no response by Finance leads contempt of Court and also spoils the name of Government among Engineers, Farmers and other Water users directly.

Yours truly,

**Er.M.Dhanasekaran,**
General Secretary, AOE

## இரங்கல்:

**திருமதி.கருப்பாயி, வயது 80 (பொறி.A.மகேந்திரன், செயற்பொறியாளர், நீ.வ.து. திருமூர்த்தி அணை கோட்டம், உடுமலைப்பேட்டை)** அவர்களின் அன்புத் தாயார் அவர்கள் 24.12.2024 அன்று உடுமலைப்பேட்டையில் காலமானார் என்பதை மிகுந்த வருத்தத்துடன் தெரிவித்துக்கொள்கிறோம். தனது தாயாரை இழந்து வருந்தும் பொறி.A.மகேந்திரன் அவர்களுக்கும் அவர்தம் குடும்பத்தாருக்கும் நம்முடைய ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

**பொறி.T.அண்ணாதுரை,** உதவிபொறியாளர், நீ.வ.து. வெண்ணாறு வடிநில உபகோட்டம், நாகப்பட்டினம் அவர்கள் 27.01.2025 அன்று நாகப்பட்டினத்தில் காலமானார் என்பதை மிகுந்த வருத்தத்துடன் தெரிவித்துக்கொள்கிறோம். அன்னாரை இழந்து வருந்தும் அவர்தம் குடும்பத்தாருக்கு நம்முடைய ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக்கொள்கிறோம். **- ஆசிரியர்**

## ENGIBEF:



**பொறி.T.அண்ணாதுரை** அவர்களின் இழப்பு ஈடு செய்ய முடியாத ஒன்று. சங்கத்தின் மூலமாக அன்னாரை இழந்து வாடும் குடும்பத்தினரிடம் பொறியாளர் சேம நல நிதி **₹2.00** லட்சத்திற்கான காசோலை மாநில பொறியாளர் சங்க துணைத் தலைவர் **பொறி.K.விஜயகுமார்**, தஞ்சாவூர் கிளை பொறியாளர் சங்க செயலாளர் **பொறி.S..தியாகராஜன்**, தஞ்சாவூர் கிளை பொறியாளர் சேம நல நிதி செயலாளர் **பொறி.கார்த்திகேயன்**, தஞ்சாவூர் கிளை உதவிப் பொறியாளர் சங்க துணைத் தலைவர் **பொறி.G.கௌரி சங்கர்** அவர்களால் வெண்ணாறு வடிநில உபகோட்டம் , நாகப்பட்டினம் உதவி செயற்பொறியாளர் **பொறி.கமலக்கண்ணன்** அவர்களின் முன்னிலையில் வழங்கப்பட்டது.

**Know our Chief Engineer, PWD, Tamil Nadu Urban Habitat Board (On Deputation), Chennai**

| | | |
|---|---|---|
| **1.** | **Name** | **V.S.KRISHNASAMY** |
| 2. | Date of Birth | 15.04.1966 |
| 3. | Native District | Coimbatore |
| 4. | Qualification | B.E.,(Civil), |
| 5. | TNPSC Rank (Revised) | 17 |
| 6. | Date of Entry in to the Dept. | 22.01.1999 |



| Designation | Name of the Office | From | To |
|---|---|---|---|
| **Assistant Engineer** | O /o the Chief Engineer, WRD, POLLACHI | 1999 | 2000 |
| | Irrigation section, NEGAMAM | 2000 | 2002 |
| | PKR branch canal section UDUMALPET | 2002 | 2005 |
| | Dam and Contour canal section THIRUMURTHI DAM | 2005 | 2006 |
| | Vepery section, EGMORE, CHENNAI | 2006 | 2010 |
| **Assistant Executive Engineer** | Building construction subdivision 3/ Dn 2, Chennai | 2010 | 2011 |
| | HIGH COURT Sub division,CHENNAI | 2011 | 2014 |
| | Building construction subdivision 3, High court campus Chennai | 2014 | 2017 |
| | TECHNICAL EDUCATION DIVISION, CHENNAI | 2017 | 2021 |
| **Executive Engineer** | **(ON DEPUTATION)** HR & CE DEPARTMENT , CHENNAI | 09/2021 | 09/2021 |
| | Buildings (C & M) Dn (Medical Works), Tiruppur | 09/2022 | 12/2022 |
| **Deputy Superintending Engineer** | Buildings (C & M) circle, Coimbatore. | 09/2022 | 12/2023 |
| **Superintending Engineer** | **(ON DEPUTATION)** HR & CE DEPARTMENT , CHENNAI | 12/2023 | 01/2025 |
| **Chief Engineer** | Promoted as Chief Engineer, PWD | 01/2025 | Till Date |

**Our hearty congratulations to him on his promotion – Editor**

## Know our Chief Engineer, PWD, Chennai Region, Chennai-5



| | | |
|---|---|---|
| **1.** | **Name** | **S. MANIKANDAN** |
| 2. | Date of Birth | 21.09.1974 |
| 3. | Native District | Madurai |
| 4. | Qualification | M.E.,(Struct.) |
| 5. | TNPSC Rank (Revised) / Year | 16 – 1998 TNPSC |
| 6. | Date of Entry in to the Dept. | 18.01.1999 |

| Designation | Name of the Office | From | To |
|---|---|---|---|
| **Assistant Engineer** | Building Construction Section-I, Pudukottai | 18.01.1999 | 03.12.2003 |
| | Building Construction Section-I, Thanjavur | 03.12.2003 | 02.05.2006 |
| | Building Construction Section-I, Madurai | 03.05.2006 | 17.02.2010 |
| **Assistant Executive Engineer** | Building (C&M) Sub Division, Thirumangalam | 18.02.2010 | 02.03.2014 |
| | O/o Chief Engineer, PWD, Madurai Region (Officer Technical) | 03.03.2014 | 06.07.2017 |
| | Building Center & Conservation Sub Division, Madurai | 07.07.2017 | 26.11.2019 |
| **Executive Engineer** | Building Center & Conservation Division, Chennai | 27.11.2019 | 06.12.2023 |
| **Superintending Engineer** | Planning & Designs Circle, PWD Chennai | 06.12.2023 | 28.11.2024 |
| | Heritage Buildings Circle, PWD, Chennai | 28.11.2024 | 10.01.2025 |
| **Chief Engineer** | Chennai Region, PWD, Chennai | 11.01.2025 | Till Date |

**Our hearty congratulations to him on his promotion – Editor**

## LIST OF TECHNICAL & ESTABLISHMENT BOOKS & GUIDELINES AVAILABLE IN WEBSITE – www.aoeaea.tnpwd.org

| SL.No. | PUBLICATION BY DEPARTMENT |
|---|---|
| 1 | BUILDING ENGINEERS HAND BOOK 2018 |
| 2 | FUNDAMENTAL RULES 2024 |
| 3 | GENERAL ADMINISTRATION MANUAL |
| 4 | GOS AND CE CIRCULARS 1984 |
| 5 | HAND BOOK OF GENERAL CIRCULARS - FINANCE 1969 |
| 6 | HAND BOOK ON SECRETARIAT ADMINISTRATION 1987 |
| 7 | IAMWARM PROJECTS - QUALITY CONTROL MANUAL 2009 |
| 8 | MADRAS PUBLIC WORKS DEPARTMENT CODE 1945 |
| 9 | MADRAS SERVICES MANUAL VOL 1 |
| 10 | MADRAS SERVICES MANUAL VOL-2 |
| 11 | MADRAS SERVICES MANUAL VOL-3 |
| 12 | RESTORATION OF BUILDINGS 1996 |
| 13 | TAMIL NADU BUILDING PRACTICE VOL 1985 |
| 14 | TAMIL NADU BUILDING PRACTICE VOL 2 1988 |
| 15 | TAMIL NADU PUBLIC WORKS DEPARTMENT CODE 1983 |
| 16 | TAMIL NADU TREASURY CODE 2014 |
| 17 | TAMIL NADU TREASURY CODE VOL-1 1991 |
| 18 | THE FUNDAMENTAL RULES OF THE TN GOVT 2001 |
| 19 | THE MADRAS ACCOUNT CODE VOL 3 1973 |
| 20 | THE MADRAS FINANCIAL CODE VOL-2 1971 |
| 21 | THE TAMIL NADU ACCOUNT CODE VOL-2 1992 |
| 22 | THE TAMIL NADU BUDGET MANUAL VOL-1 1992 |
| 23 | THE TAMIL NADU PENSION RULES 2010 |
| 24 | THE TAMIL NADU TRANSPARENCY IN TENDERS ACT 1998, 2012 |
| 25 | THE TAMIL NADU TRAVELLING ALLOWANCE RULES 1993 |
| 26 | TNBP ELECTRICAL PORTION 1983 |
| 27 | TAMIL NADU TREASURY CODE 2014 |
| 28 | TAMIL NADU TREASURY CODE VOL-1 1991 |
| 29 | THE FUNDAMENTAL RULES OF THE TN GOVT 2001 |
| | **PUBLICATION BY ASSOCIATION** |
| 30 | 150 YEARS HISTORY OF PWD |
| 31 | CIVIL ENGINEERS HAND BOOK 1986 |
| 32 | COLLEGE OF ENGINEERING MANUAL - IRRIGATION BY WM ELLIS |
| 33 | DESIGN & CONSTRUCTION OF MULTI STOREYED - TRAINING COURSE |
| 34 | DESIGN & CONSTRUCTION OF MULTI STOREYED BUILDINGS |
| 35 | DESIGN OF FOUNDATIONS & DETAILING |
| 36 | DESIGNED HOUSES FOR ALL - 2000 |
| 37 | DESIGNED HOUSES FOR ALL - 2011 |
| 38 | DESIGNED HOUSES FOR ALL-1992 |

| | |
|---|---|
| 39 | ELECTRO MECH HANDBOOK 1986 |
| 40 | ENGINEERS HAND BOOK BY KARNATAKA AEA |
| 41 | FOUNDATION FAILURES REMEDIAL MEASURES 2002 |
| 42 | GUIDE BOOK FOR ASSISTANT ENGINEERS-2019 |
| 43 | HAND BOOK OF CONSOLIDATED DATA VOL-1 - 1997 |
| 44 | HAND BOOK OF CONSOLIDATED DATA VOL-2 - 2001 |
| 45 | HAND BOOK ON IRRIGATION CIRCULARS - 2007 |
| 46 | HAND BOOK ON IRRIGATION STRUCTURES - 2003 |
| 47 | HANDBOOK ON CEMENT & CEMENT DATA - 1998 |
| 48 | MEMORANDUM ON RESTRUCTURING OF PWD 1993 |
| 49 | MINI SERVICE HAND BOOK |
| 50 | MINI TECHNICAL HAND BOOK 1981 |
| 51 | MINI TECHNICAL HAND BOOK 1984 |
| 52 | MINI TECHNICAL HAND BOOK -1990 |
| 53 | MINI TECHNICAL HAND BOOK 1991 |
| 54 | MINI TECHNICAL HAND BOOK 2011 |
| 55 | SERVICE MANUAL FOR TNPWD ENGINEERS - 1986 |
| 56 | STRUCTURAL DESIGN OF BUILDINGS |
| 57 | TAMILNADU PWD PAST & PRESENT - 2011 |
| 58 | THOUGHTS OF A SENIOR ENGINEER |
| 59 | WHO IS AN ENGINEER 1998 |
| | **GENERAL PUBLICATION** |
| 60 | CUSECS CANDIDATE - MEMOIRS OF AN ENGINEER BY Dr.KL RAO |
| 61 | ENGINEERS CONTRACTORS & ARBITRATION BY ANDHRA AEA |
| 62 | ESTABLISHMENT RULES 1999 |
| 63 | GOS AND CE CIRCULARS VOL 2 1989 |
| 64 | HANDBOOK ON ACCOUNTS – BHAVANI SAGAR 2018 |
| 65 | HANDBOOK ON OFFICE PROCEDURES – BHAVANI SAGAR 2014 VOL 1 |
| 66 | HANDBOOK ON OFFICE PROCEDURES – BHAVANI SAGAR 2014 VOL-2 |
| 67 | HANDBOOK ON OFFICE PROCEDURES – BHAVANI SAGAR 2014 VOL-3 |
| 68 | HANDBOOK ON OFFICE PROCEDURES – BHAVANI SAGAR 2018 |
| 69 | IMPORTANT GOVERNMET ORDERS COLLECTION FROM 1981 TO 2012 |
| 70 | MAINTENANCE MANUAL ON BUILDING AND SERVICES 1986 |
| 71 | NEW MATERIALS AND TECHNIQUES IN DAM CONSTRUCTION 1987 |
| 72 | OPERATION & MAINTENANCE OF IRRIGATION SYSTEM UNDER W.R.C.P |
| 73 | REGIONAL SEMINAR ON HYDROLOGICAL PROBLEMS RELATING TO TANKS |
| 74 | SERVICE PROCEDURE – BHAVANI SAGAR 2018 |
| 75 | WORKSHOP ON DESIGN FLOOD ESTIMATION -1 |
| 76 | WORKSHOP ON DESIGN FLOOD ESTIMATION |

**Er.V.Hemanth Kumar**
Secretary, Publication, AEA

**Er.M.Suganthi**
Joint Secretary, Publication, AOE

## ENGIBEF PHASE-V SCHEME

5

| S. No. | ENGIBEF No. | Recipt No & Amount | Name & Address |
|---|---|---|---|
| 1 | V-727-DMP | R.No.777 Rs.10,500 | **Er.R.V.Mohanraj** AEE, WRD, Upper Pennaiyar Basin Sub Division, Hosur |
| 2 | V-728-TRY | R.No.778 Rs.3000 | **Er.R.Seenivasan** AEE, WRD, Maruthaiyar Basin Sub Division, Perambalur |
| 3 | V-729-CHE | R.No.779 Rs.10,500 | **Er.R.Mageshwari** AEE, WRD, Special Designs Division, Chennai-5 |
| 4 | V-730-CHE | R.No.780 Rs.10,500 | **Er.V.Devasena** AEE, WRD, Special Designs Division, Chennai-5 |
| 5 | V-731-TNL | R.No.781 Rs.10,500 | **Er.S.Sankarraj** AEE, WRD, Korampallam Aru Basin Sub Division, Kovilpatti |
| 6 | V-732-TNL | R.No.782 Rs.10,500 | **Er.K.Arumugaraj** AE, WRD, O/o AEE, Korampallam Aru Basin Sub Division, Kovilpatti |
| 7 | V-733-DMP | R.No.783 Rs.10,500 | **Er.A.M.Gowri** AEE, WRD, O/o AEE, Ground Water Sub Division, Dharmapuri |
| 8 | V-734-CHE | R.No.784 Rs.10,500 | **Er.D.Sukanya** AEE, WRD, O/o EE, O&M & SDSO, Chepuak, Chennai-5 |
| 9 | V-735-CHE | R.No.785 Rs.10,500 | **Er.P.Karthikeyan** AE, WRD, O/o EE, Mining & Monitoring Div. Chennai-5 |
| 10 | V-736-CHE | R.No.786 Rs.10,500 | **Er.M.Sangeetha** AEE, WRD, O/o EE, Mining & Monitoring Div. Chennai-5 |
| 11 | V-737-CHE | R.No.787 Rs.10,500 | **Er.R.Dhavamani** AE, WRD, O/o EIC & CE (Gen), WRD, PIM Cell, Chennai-5 |
| 12 | V-738-CHE | R.No.788 Rs.3,000 | **Er.R.Santhakumari,** AE, WRD, O/o O&M & SDSO, Chepauk, Chennai-5 |
| 13 | V-739-POL | R.No.789 Rs.8,000 | **Er.N.Babu Sabareswaran,** AEE, WRD, Udumalai Canal Sub Division, Udumalpet |
| 14 | V-740-TRY | R.No.790 Rs.10,500 | **Er.R.Mohanasundaram,** AE, WRD, O/o EE, RC Division, Trichy |
| 15 | V-741-TRM | R.No.791 Rs.10,500 | **Er.N.Lavanya,** AE, WRD, O/o EE, Gauging Division, Tharamani, Chennai |
| 16 | V-742-KKD | R.No.792 Rs.3,000 | **Er.P.Alaguraja,** AE, WRD, Irrigation Section-2, Devakottai |

We request our member engineers who have not enrolled so far in ENGIBEF Phase V Scheme to enroll as full-fledged member by remitting the amount through core banking system **'TNPWD ENGIBEF, State Bank of India, A/C No.10031641514 of PWD Complex Branch, Chepauk, (IFSC Code SBIN0006489), Chennai" or through branch offices in Cash / Cheque.**

We solicit your earnest co-operation to enroll in this Scheme & help the deceased Engineers' family.

**"We expect more members to enroll in ENGIBEF PHASE V"**

**Er.D.Rajeshwar Babu** Treasurer/ENGIBEF (Cell:9894154915)

**Er.S.Eswari** Secretary/ENGIBEF

**JOIN ENGIBEF JOIN ENGIBEF JOIN ENGIBEF**

RNI No.TNBIL/2010/35983

Regd.News Magazine | Date of Publication : Third week of every month | தனி பிரதி ரூ.10/-

PORIYAALAR, Egmore RMS / 1 Patrika, Chennai Reg. No.T.N. / CH (C) / 307 / 21 - 23
Posted on : 22.02.2025, Licensed to Post without prepayment under WPP No.TN/PMG(CCR), WPP No.340/21-23

# பொறியாளர் நல நிதி 5-ம் திட்டத்தில் உறுப்பினர்கள் அனைவரும் இணைந்திடுமாறு கேட்டுக்கொள்கிறோம்...

## பொறியாளர் நல நிதி (ENGIBEF) ஐந்தாவது திட்டம்

ஐந்தாம் திட்டத்தினால் முழுப் பயன் ரூ.2.50 லட்சம் பெற உறுப்பினர்கள் செலுத்த வேண்டிய தொகை

| | | | |
|---|---|---|---|
| 1 | V - A | முதல் திட்ட உறுப்பினர்கள் (ரூ.300 செலுத்தியவர்கள்) | ரூ.10,200/- |
| 2 | V - B | இரண்டாம் திட்ட உறுப்பினர்கள் (ரூ.600 செலுத்தியவர்கள்) | ரூ.9,900/- |
| 3 | V - C | மூன்றாம் திட்ட உறுப்பினர்கள் (ரூ.1,000 செலுத்தியவர்கள்) | ரூ.9,500/- |
| 4 | V - D | நான்காம் திட்ட உறுப்பினர்கள் (ரூ.2,000 செலுத்தியவர்கள்) | ரூ.8,500/- |
| 5 | V - E | மேம்படுத்தப்பட்ட நான்காம் திட்ட உறுப்பினர்கள் (ரூ.7,500 செலுத்தியவர்கள்) | ரூ.3,000/- |
| 6 | V - F | புதிய உறுப்பினர்கள் செலுத்த வேண்டியது | ரூ.10,500/- |

I. பணி காலத்தில் உறுப்பினர் இயற்கை எய்த நேர்ந்தால் வழங்கப்படும் தொகை

| V - A | | V - B | | V - C | | V - D | | V - E | | V - F |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| முதல் திட்ட பயன் | கூடுதல் பயன் | இரண்டாம் திட்ட பயன் | கூடுதல் பயன் | மூன்றாம் திட்ட பயன் | கூடுதல் பயன் | நான்காம் திட்ட பயன் | கூடுதல் பயன் | மேம்படுத்தப்பட்ட நான்காம் திட்ட பயன் | கூடுதல் பயன் | மொத்த பயன் |
| ரூ.10,000/- | ரூ.2,40,000/- | ரூ.20,000/- | ரூ.2,30,000/- | ரூ.35,000/- | ரூ.2,15,000/- | ரூ.50,000/- | ரூ.2,00,000/- | ரூ.2,00,000/- | ரூ.50,000/- | ரூ.2,50,000/- |

(மேற்படி திட்டம் 14.12.2019 அன்று விழுப்புரம் மாநில பொதுக்குழுக் கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டுள்ளது. எனவே, மேற்படி திட்டம் 01.01.2020 முதல் நடைமுறைக்கு வருகிறது)

II. ஊனமுற்றதன் காரணமாக பணியிலிருந்து ஓய்வு பெறும்போது உறுப்பினர்களுக்கு அதன்படி அளிக்கப்படும் தொகை.

P-I: ரூ.10,000/- P-II: ரூ.20,000/- P-III: ரூ.35,000/- P-IV: ரூ.50,000/- P-IV (Mod): ரூ.60,000/- P-V: ரூ.75,000/-

III. பதவியிலிருந்து ஓய்வு பெறும் போது உறுப்பினர்களுக்கு திரும்பக் கிடைக்கும் மொத்த தொகை: நலநிதிக்கு செலுத்தப்பட்ட தொகை +3% தனிவட்டி.

Printed by: **Mr.S.G.PARTHASARATHY**, and Published by: **Er.B.ARUN**,M.E. on behalf of Association of Engineers, PWD & WRD from Association of Engineers, PWD & WRD, PWD Campus, Chepauk, Chennai - 5, and Printed at : V.P.S. Printers, 292, Triplicane High Road, Triplicane, Chennai - 5, and Published at Association of Engineers, PWD & WRD, PWD Campus, Chepauk, Chennai-5, Editor: **Er.M.DHANASEKARAN**,M.E.